## 2020 டிசம்பர் மாதம் 11ம் தேதி மாலை 3.00 மணிக்கு நெல்லியாளம் நகராட்சியில் நடைப்பெற்ற அவசர கூட்டத்தின் தீர்மான நடவடிக்கை நகல்

## முன்னிலை :-திருமதி.தோ. லீனா சைமன்,பி.எஸ்.சி – தனி அலுவலர்

**பொருள்.1**

நெல்லியாளம் நகராட்சி சிறப்பு சாலைகள் திட்டம் 2020-2021 திட்டத்தின் கீழ் சாலை பணிகள் மேற்கொள்ள ரூ.100.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அதில் ரூ.90.00 இலட்சம் சிறப்பு சாலைகள் திட்டத்தில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. நகராட்சி பங்களிப்பு தொகை ரூ.10.00 இலட்சம் ஆகும். அதன் அடிப்படையில் நெல்லியாளம் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் பழுதடைந்த சாலகளை இன்டர்லாக் சாலையாக புதுப்பிப்பதற்கு கீழ்கண்ட பணிகள் தேர்வு செய்யப்பட்டு அதற்க்கான மதிப்பீடு தயார் செய்யப்பட்டு பணிகளுக்கு அனுமதி வேண்டி மன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

**பணிகளின் விவரங்கள்**

| வ. எண் | வேலையின் பெயர் | சாலையின் தற்போதை தன்மை | நீளம் (கி.மீ) | அகலம் (மீ) | மதிப்பீடு தொகை இலட்சம் |
|---|---|---|---|---|---|
| 1. | உப்பட்டி பூமரம் சாலையில் இண்டர்லாக் பேவர்பிளாக் அமைத்தல் | தார் சாலை | 0.095 | 4.10 | 10.00 |
| 2. | உப்பட்டி கே.கே.நகர் சாலையில் இண்டர்லாக் பேவர்பிளாக் அமைத்தல் | தார் சாலை | 0.095 | 4.10 | 10.00 |
| 3. | உப்பட்டி முதல் செட்டிவயல் சாலை இண்டர்லாக் பேவர்பிளாக் அமைத்தல் | தார் சாலை | 0.095 | 4.10 | 10.00 |
| 4. | தேவாலா அட்டி அங்கன்வாடி அருகில் இண்டர்லாக் பேவர்பிளாக் அமைத்தல் | தார் சாலை | 0.095 | 4.10 | 10.00 |
| 5. | தேவாலா அட்டி சாலை முதல் தேவாலா அட்டி தொடக்கப்பள்ளி அருகில் இண்டர்லாக் பேவர்பிளாக் அமைத்தல் | தார் சாலை | 0.095 | 4.10 | 10.00 |
| 6. | குண்டில்கடவு ஆதிவாசி காலனி சாலை இண்டர்லாக் பேவர்பிளாக் அமைத்தல் | தார் சாலை | 0.108 | 3.60 | 10.00 |
| 7. | கோட்டகுன்னு ஆதிவாசி காலனி சாலை இண்டர்லாக் பேவர்பிளாக் அமைத்தல் | தார் சாலை | 0.108 | 3.60 | 10.00 |
| 8. | கூமூலா ஆதிவாசி காலனி சாலை இண்டர்லாக் பேவர்பிளாக் அமைத்தல் | தார் சாலை | 0.095 | 4.10 | 10.00 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 9. | கைதக்கொல்லி ஆதிவாசி காலனி சாலை இண்டர்லாக் பேவர்பிளாக் அமைத்தல் | தார் சாலை | 0.108 | 3,60 | 10.00 |
| 10 | பாண்டியார் முதல் ஆமைக்குளம் சாலை வரை இண்டர்லாக் பேவர்பிளாக் அமைத்தல் | தார் சாலை | 0.095 | 4.10 | 10.00 |
| | மொத்தம் | | **0.989** | | **100.00** |

<u>அலுவலக குறிப்பு</u>

1. மன்றம் அனுமதி வழங்கலாம்

2.நகராட்சி பங்களிப் தோகை ரூ.10,00 இலட்ம் பொதுநிதியில் வழங்கலாம் .

(கையொப்பம்) 14/12/2020

தனி அலுவலர்

நெல்லியாளம் நகராட்சி

**2020 டிசம்பர் மாதம் 22 ம் தேதி மாலை 3.00 மணிக்கு நெல்லியாளம் நகராட்சியில் நடைப்பெற்ற அவசர கூட்டத்தின் தீர்மான நடவடிக்கை நகல்**

**முன்னிலை :-திருமதி.தோ. லீனா சைமன்.பி.எஸ்.சி – தனி அலுவலர்**

**பொருள் எண்.1**

நெல்லியாளம் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் இயங்கும் முடி திருத்தகம்/ அழகு நிலையம்/ ஸ்பா/ மசாஜ் நிலையம் போன்றவற்றிக்கு நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.19775/J2/2019–3, நாள்.15/12/2020–ன்படி, உரிமம் பெறுவதற்கு மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்.

**பொருள் எண்.2**

நாடுகாணி பாலம் அமைக்கும் பணிக்கு ஒப்பந்தம் பெற்ற ஒப்பந்ததாரர் திரு.காசிலிங்கம் அவர்கள் தனக்கு உடல்நிலை சரியில்லாத காரணத்தால் மேற்கண்ட பணியை தனக்கு செய்ய இயலாது என தெரிவித்து 9.12.2020 அன்று கடிதம் அளித்துள்ளார்.எனவே மேற்படி பணியை ரத்து செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதி வழங்கலாம்

தோ. [signature] 22/12/2020

தனி அலுவலர்

நெல்லியாளம் நகராட்சி

**2020 டிசம்பர் மாதம் 31 ம் தேதி வியாழக்கிழமை காலை 11.00 மணிக்கு நெல்லியாளம் நகராட்சியில் நடைப்பெற்ற சாதாரண கூட்டத்தின் தீர்மான நடவடிக்கை நகல்**

**முன்னிலை :-திருமதி.தோ. லீனா சைமன்,பி.எஸ்.சி – தனி அலுவலர்**

**பொருள் எண்.1**

வட்டாட்சியர், கூடலூர் அவர்களின் ந.க.அ3/1645/2012, நாள்.20/11/2020ல் கூடலூர் வட்டம் தேவாலா 2 கிராமம் புல எண்.525 காலையில் 0.005 ஹெக்டேர் நிலத்தில் காவல்துறை சோதனைத் சாவடி அமைக்க நிலமாற்றம் செய்ய நெல்லியாளம் நகராட்சியின் அனுமதி கோரப்பட்டுள்ளதை தொடர்ந்து நகரமைப்பு ஆய்வாளரால் இடம் ஆய்வு செய்யப்பட்டதில் இடமானது காலை என்று 'அ' பதிவேட்டில் உள்ளது. ஆகவே இந்நகராட்சிக்கு ஆட்சேபனை ஏதும் இல்லை என்பதை வட்டாட்சியருக்கு தெரிவிக்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

அனுமதி வழங்கலாம்.

**பொருள் எண்.2**

வட்டாட்சியர், கூடலூர் அவர்களின் ந.க.அ3/533/2018, நாள்.20/11/2020ல் கூடலூர் வட்டம் தேவாலா 1 கிராமம் புல எண்.111/3ல் 0.40 ஏக்கர் நிலத்தில் நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையம் கட்ட நிலமாற்றம் செய்ய நெல்லியாளம் நகராட்சியின் அனுமதி கோரப்பட்டுள்ளதை தொடர்ந்து நகரமைப்பு ஆய்வாளரால் இடம் ஆய்வு செய்யப்பட்டதில் இடமானது Asset Waste இடத்தில் அமைவதால் இந்நகராட்சிக்கு ஆட்சேபனை ஏதும் இல்லை என்பதை வட்டாட்சியருக்கு தெரிவிக்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

அனுமதி வழங்கலாம்.

**பொருள் எண்.3**

இந்நகராட்சிக்கு 15வது மத்திய நிதிக்கு மானியம் 2020-2021 ம் ஆண்டு திட்டத்தின் கீழ் முதல் தவணையாக (Tied Grant )ரூ.122.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. ரூ.122.00 இலட்சத்திற்கு குடிநீர் குழாய் பணிகள் மேற்கொள்ளுமாறு நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களால் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் நெல்லியாளம் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் குடிநீர் குழாய் அமைப்பதற்க்கு கீழ்கண்ட 14 பணிகள் தேர்வு செய்யப்பட்டு அதற்கான மதிப்பீடு ரூ.122.00 இலட்சம் தயார் செய்யபட்டு அப்பணிகளுக்குஅனுமதி வேண்டி மன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

பணிகளின் விவரங்கள்

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு தொகை இலட்சம் |
|---|---|---|
| 1 | நீர்மட்டம் முதல் பந்தலூர் வரை குடிநீர் குழாய் அமைத்தல் ( 65 mm ) | 10.00 |
| 2 | நீர்மட்டம் முதல் தேவாலா வரை குடிநீர் குழாய் அமைத்தல் ( 65 mm ) | 10.00 |
| 3 | பந்தலூர் அட்டி கிணறு, பம்பு அறை, தரைமட்டம் நீர்தேக்க தொட்டி மற்றும் குடிநீர் குழாய் அமைத்தல் | 10.00 |
| 4 | பந்தலூர் பஜார் கிணறு, பம்பு அறை குடிநீர் குழாய் அமைத்தல் | 10.00 |
| 5 | உப்பட்டி பஜார் குடிநீர் குழாய் அமைத்தல் ( 50 mm ) | 10.00 |
| 6 | பெருங்கறை தரைமட்டம் நீர்தேக்க தொட்டி அமைத்தல் ( 3 m dia ) | 6.00 |
| 7 | அட்டிவயல் தரைமட்டம் நீர்தேக்க தொட்டி அமைத்தல் ( 3 m dia ) | 6.00 |
| 8 | அத்திமாநகர் குடிநீர் திட்டம் அமைத்தல் ( 50 mm dia ) | 10.00 |
| 9 | கோழிக்கொல்லி முதல் பொன்னூர் மற்றும் கோழிக்கொல்லி முதல் பால்மேடு வரை குடிநீர் குழாய் அமைத்தல் ( 50 mm dia ) | 10.00 |
| 10 | வாளவயல் ஆதிவாசி காலணி,தேவாலா அட்டி முதல் கோழிக்கொல்லி வரை குடிநீர் குழாய் அமைத்தல் ( 50 mm dia ) | 10.00 |

| | | |
|---|---|---|
| 11 | நெல்லியாளம் தரைமட்டம் நீர்தேக்க தொட்டி அமைத்தல் ( 3.5 m dia ) | 7.00 |
| 12 | பன்னிக்கொல்லி தரைமட்டம் நீர்தேக்க தொட்டி அமைத்தல் ( 3.5 m dia) | 7.00 |
| 13 | ஆமைக்குளம் தரைமட்டம் நீர்தேக்க தொட்டி அமைத்தல் ( 3.5 m dia ) | 7.00 |
| 14 | சாமியார்காலணி குடிநீர் திட்டம் அமைத்தல் ( 50 mm.40mm dia ) | 9.00 |
| | மொத்தம் | **122.00** |

<u>அலுவலக குறிப்பு</u>

1. மன்றம் அனுமதி வழங்கலாம்
2. நகராட்சி பங்களிப்பு தொகை ரூ.10.00 இலட்சம் பொதுநிதியில் வழங்கலாம் .

<u>பொருள் எண்.4</u>

நெல்லியாளம் நகராட்சிக்கட்பட்ட பல்வேறு பகுதிகளில் வறட்சியின் காரணமாக பொதுமக்களுக்கு குடிநீர் வழங்க பற்றாகுறையாக உள்ளதால் டேங்கர் லாரியின் மூலம் வழங்க அவசியம் ஏற்படுகிறது.மேலும் இப்பணியினை விரைவாக மேற்கொள்ள வேண்டியுள்ள காரணத்தால் ஒப்பந்தப்புள்ளி கோர போதுமான கால அவகாசம் இல்லாத கராணத்தினாலும் பொதுமக்களுக்கு குடிநீர் வழங்க வேண்டி பணிகளை தமிழ்நாடு நகராட்சி சட்டம் 1920 பிரிவு 15–ன்கீழ் (Section-15) மேற்கொண்டமைக்கும், ஒப்பந்ததாரருக்கு பட்டியல் தொகை ரூ.672672 வழங்குவதற்க்கும் தனி அலுவலர் மற்றும் ஆணையாளரின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

அனுமதிக்கலாம்.

<u>பொருள் எண்.5</u>

நெல்லியாளம் நகராட்சிக்குப்பட்ட ஆமைக்குளம் டேங்கில் நீர் கசிவு ஏற்பட்டுள்ளதால் குடிநீர் தேக்க இயலவில்லை.எனவே இதனை குடிநீர் அவசரம் அவசியம் கருதி செய்வதற்க்கு மதிப்பீடு தொகை ரூ. 10.00 இலட்சத்திற்க்கு தனி அலுவலர் அனுமதிக்கோரப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

அனுமதிக்கலாம்.

<u>பொருள் எண்.6</u>

நெல்லியாளம் நகராட்சிக்குப்பட்ட வார்டு எண் 4 இங்குள்ள குடியிருப்புகளுக்கு ஓஸ் மூலம் குடிநீர் விநியோகிகப்பட்டு வருகிறது. இக்குழாய் 500 மீ துாரத்திற்க்கு யானையால் சேதம் செய்யப்பட்டு இக்குழாய்கள் பயன்படுத்த இயலாமல் உள்ளது. எனவே புதிதாக 500 மீ துாரத்திற்க்கு ஓஸ் குழாய்கள் வாங்க ஆகும் செலவினம் ரூ. 4.50 இலட்சத்திற்க்கு தனி அலுவலர் அனுமதிக்கோரப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

அனுமதிக்கலாம்.

<u>பொருள் எண்.7</u>

நெல்லியாளம் நகராட்சிக்குட்பட்ட 21 வார்டுகளிலும் உள்ள பொதுமக்களுக்கு குடிநீர் விநியோகத்திற்கு 110 மின் மோட்டார்கள் 10 டீசல் எஞ்சின்கள் மொத்தம் 120 குடிநீர் ஆதாரங்கள் மூலம் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. மேற்படி பம்பு அறைகளிலுள்ள மின்மோட்டார்கள் மற்றும் டீசல் எஞ்சின்கள் இயக்க நகராட்சியில் போதிய பணியாளர்கள் இல்லாத காரணத்தால் ஒப்பந்த அடிப்படையில் அந்தந்த பகுதிகளில் உள்ள நபர்களை வைத்து மின் மோட்டார்கள் இயக்கப்பட்டு பொது மக்களுக்கு குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. மேற்படி பம்பு இயக்கும் பணிக்கான ஒப்பந்தக்காலம் 31/07/2020 உடன் முடிவடைந்து விட்டதால் 01/08/2020 முதல் 31/12/2020 முடிய மூன்று மாத காலங்களுக்கு திரு.தேவேந்திரன் என்பவரின் பழைய ஒப்பந்தப்புள்ளியின்படி நீட்டிப்பு செய்து பணிகள் மேற்கொள்ளப்பட்டு வந்தது. தற்போது 01/01/2021 முதல் 31/03/2021 முடிய மூன்று மாத காலங்களுக்கு திரு.தேவேந்திரன் என்பவரின் பழைய ஒப்பந்தப்புள்ளியின்படி நீட்டிப்பு செய்து பணிகள் மேற்கொள்ளவும் பட்டியல் தொகை வழங்கவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

அனுமதி வழங்கலாம்.

**பொருள் எண்.8**

அரசாணை எண் G.O.No.298 MAWS (M.A 4) Department நாள்.02/09/2020 நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் ந.க.எண்.8763/2020/R2, நாள்.25/09/2020 அரசாணை மற்றும் நகராட்சி நிர்வாக ஆணையரின் கடிதம் மன்றத்தின் பார்வைக்கு.

உள்ளாட்சி அமைப்புகளின் குத்தகை இனங்களின் கீழ் வாடகை வசூல் செய்யும் இனங்களுக்கு நிலையில் குத்தகை இனங்களின் வாடகை தொகை 01/04/2020 முதல் 31/05/2020 வரை உள்ள காலத்திற்கு விலக்களித்து தள்ளுபடி செய்ய உத்திரவிடப்பட்டதை தொடர்ந்து இந்நகராட்சியில் 01/04/2020 முதல் 31/05/2020 வரை உள்ள வாடகை தொகை ரூ.209231/– மற்றும் அதற்கான GST தொகை ரூ.32794/– ஆக மொத்தம் ரூ.242025/– தள்ளுபடி செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.
2. ரூ.242025/– பட்டியலில் கண்டுள்ளவாறு தள்ளுபடி செய்திட மன்றம் அனுமதி வழங்கலாம்.

**பொருள் எண்.9**

நெல்லியாளம் நகராட்சிக்குட்பட்ட 21 வார்டுகளிலும் 2019–2020 ஆம் ஆண்டுக்கான சொத்துவரி, தொழில்வரி, குடிநீர் கட்டணம் மற்றும் கடை வாடகை ஆகியவற்றை 100% சதவிதம் வசூல் செய்யும் பொருட்டு அனைத்து வார்டுகளிலும் ஆட்டோ மூலம் விளம்பரம் செய்ய ஆகும் உத்தேச செலவுத் தொகை ரூ.50000/–த்திற்கு தனி அலுவலரின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

அனுமதி அளிக்கலாம்.

தனி அலுவலர் 31/12/2020
நெல்லியாளம் நகராட்சி